**களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) - 2021**

களு கங்கை நீர்வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆந் திகதிய எஸ்எல்-பி 117 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. களு கங்கை நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்கல் மற்றும் நீர் விநியோக வலையமைப்புக்களை மறுசீரமைத்தல் ஊடாக மேற்கு மாகாணத்தின் தென் பகுதிக்கு பாதுகாப்பான நீரினை வழங்கல் மற்றும் நீர் விநியோக வினைத்திறனை அதிகரித்தல், அதன் ஊடாக மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,337 மில்லியனிற்கு சமனான 39,069 மில்லியன் யப்பான் யென் ஆனதுடன் அதில் ரூபா 45,056 மில்லியனிற்கு சமனான 31,810 மில்லியன் யப்பான் யென், யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மே 01 ஆந் திகதியில் ஆரம்பித்திருந்ததுடன் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைப்பாடுகள் | தொகை ரூபா மில்லியனில் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 1.86 மில்லியன் ஆன முற்பண மீள செலுத்தலானது செலுத்த வேண்டிய கணக்கில் இருந்து கழிக்கப்படுவதற்கு பதிலாக கடன் தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. | 1.86 | JICA கடன் வருமானத்தின் மூலம் ஆலோசனை சேவைகள் ஒப்பந்தத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, செலுத்திய முற்பணம் மீள அறவிடப்படல் சமனான 45 தவணைகளில் (பெறுமதி 1.86 மில்லியன்) மேற்கொள்ளப்படுகின்றதுடன், கடன் வருமானத்தில் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற இடைக்கால பில்கள்களிலிருந்து கழிக்கப்படும். | தவறான பதிவினை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (ERD) வழங்கல் பொழிப்புக்களின் பிரகாரம், கடனின் உள்ளவாரான வழங்கல் தொகையானது ரூபா 451.74 மில்லியனாக காணப்பட்டது, எனினும் நிதி அறிக்கைகளில் இது ரூபா 449.88 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 1.86 மில்லியனான வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 1.86 | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடன் வழங்கல் இணக்கம் செய்யப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்தின் III ஆம் உறுப்புரையின் 4 (3) பிரிவின் பிரகாரம், கடன் பெறுநருக்கு அக் கடன் தொகையில் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு (துணைக் கடன்) கடன் பெற்றுக் கொடுக்க முடியும். | 2021 திசெம்பர் 31 வரையிலும் கடன் பெறுநர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை இடையே துணைக் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயமானது செயற்திட்ட பதவியணிக்கு அல்லது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கட்டளைக்கு அப்பாற்பட்டது. | திறைச்சேரி தடை நீக்கம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதி பிரமாணம் 626 | நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் தனித் தனியே கணக்கு புத்தகங்கள் பேணிச் செல்லல் வேண்டும். எவ்வாறாயினும், செய்றதிட்டத்திற்காக தனியே வங்கி கணக்கொன்று மற்றும் காசுப் புத்தகமொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக தனித் தனியே கணக்கு புத்தகங்கள் பேணிச் செல்லல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டமானது கட்டுமான நடவடிக்கைகளுக்காக பத்து செயற்திட்ட பெகேஜ்களையும் ஆலோசனை சேவை பெகேஜ் ஒன்றினையும் கொண்டுள்ளது. பத்து செயற்திட்டத்தில், செயற்திட்டம் - 1 இன் ஐந்து செயற்திட்டகளின் விரிவான வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் மற்றும் திட்டம் - 2 இன் எஞ்சிய ஐந்து ஒப்பந்த பெகேஜ்கள் தொடர்பான விரிவான வடிவமைப்பு பணிகள் மட்டுமே செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆலோசனை ஒப்பந்தம் வழங்கப்பட்டு பெறுகை நடைமுறையின் விரிவான வடிவமைப்பு மற்றும் உதவி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே, 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயற்திட்டத்தின் எந்தவொரு பௌதீக செயன் முன்னேற்றமும் காணப்படவில்லை. அதன் பிரகாரம், செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பின் செயன்முன்னேற்றம் மற்றும் பெறுகை நடைமுறையின் உதவி பின்வருமாறு ஆகும்.

| இல. | செயற்திட்ட கூறு / செயற்திட்டம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்ட பணிகள் | திட்டமிடப்பட்ட காலப்பகுதி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான செயன் முன்னேற்றம் | தாமதம்/ கணக்காய்வு குறைப்பாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | ஆலோசனை சேவைகள் ஒப்பந்தம் | செயற்திட்டம் - 1 மற்றும் செயற்திட்டம் - 2 இற்கான விரிவான வடிவமைப்பு | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது . | செயற்திட்டம் - 1 இன் ஒப்பந்த பெகேஜ் 1, 3 மற்றும் 5 இன் வடிவமைப்பு பணிகள் 2021 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டம் - 2 தொடர்பாக 6-10 வரையான ஒப்பந்த பெகேஜ்களின் கருத்திற் கொள்ளப்படக் கூடிய வடிவமைப்பு செயன் | ஒப்பந்தம் வழங்கல் தாமதிப்பதற்கு இடமுள்ளது. | அமுலாக்கல் கால அட்டவணை 12 மாதங்கள் ஆகும். எவ்வாறாயினும், தொற்று நிலை காரணத்தினால் ஏற்பற்ற கடுமையான பின்னடைவினை நிராகரித்து, மேற்படி பெகேஜ் 2 இன் விரிவான வடிவமைப்பு 6 மாதங்களில் (2022 யூலை மாதத்தில்) | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னேற்றமொன்று 2021 திசெம்பர் 31 திகதி வரையிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | நாம் பூர்த்தி செய்துள்ளோம். | |
| (ஆ) | உட்கொள்ளும் வசதி மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானம். – பெகேஜ் 01 | ஏல ஆவணத்திற்காக JICA உடன்பாட்டினை பெறுதல் | 2021 நவம்பர் தொடக்கம் திசெம்பர் வரை | வடிவமைப்பு பணிகள் நடைமுறையில் உள்ளமையினால் ஏல ஆவணம் தயாரிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட காலத்தினுள் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கு இடமுள்ளது. | அமுல்படுத்தல் கால அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்புக் காலம் 12 மாதங்கள் என கருத்திற் கொள்ளவும். எவ்வாறாயினும், கொவிட்-19 மற்றும் விடயப்பரப்பில் தேவையான மாற்றங்களுக்கு இடமளித்தல் போன்ற காரணத்தினால் வடிவமைப்பின் செயன் முன்னேற்றம் முதலாவது பாதிக்கப்பட்டது. (முதலில் முன்மொழியப்பட்ட கசடு சுத்திகரிப்பு முறையானது | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ‘‘வடிகட்டு அழுத்தங்கள்’’ என்பதில் இருந்து ‘‘கசடு மையவிலக்குகள்’’ என மாற்றப்பட்டு அதற்கேற்ப வடிவமைப்புக்கள் மாற்றப்பட்டமை வலியுறுத்தப்படல் வேண்டும்) | |
| (இ) | பரிமாற்ற மெயின்கள் மற்றும் விநியோக மெயின்களின் வழங்குதல் மற்றும் இடுதல் - பெகேஜ் 02 | ஏல அழைப்பு மற்றும் மூடல் | 2021 ஒக்தோபர் தொடக்கம் 2022 சனவரி | வடிவமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், 2021 திசெம்பர் 31 அம் திகதி வரையிலும் பெறுகை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட காலத்தினுள் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கு இடமுள்ளது. | ஒப்பந்த பெகெஜ் - 2 இன் விரிவான வடிவமைப்பு நடவடிக்கைகள் குறித்த திட்டமிட்ட காலப்பகுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது. எனவே, அவ்வாறான கால தாமதம் இல்லை. | பெறுகை செயன்முறையினை விரைவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஈ) | தரை நீர் தேக்கங்கள் மற்றும் நீரேற்று நிலையங்களின் கட்டுமானம் - பெகேஜ் 03 | ஏல ஆவணத்திற்காக JICA உடன்பாட்டினை பெறுதல் | 2021 நவம்பர் தொடக்கம் திசெம்பர் வரை | பெகெஜ் 03 வடிவமைப்பு கட்டத்தில் காணப்படுகின்றமையினால் ஏல ஆவணம் தயாரிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட காலத்தினுள் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கு இடமுள்ளது. | அமுல்படுத்தல் காலப்பகுதி 12 மாதங்கள் ஆகும். பூர்த்தி செய்யப்படாத கையகப்படுத்தல் செயன்முறையின் காரணத்தினால் நிலத்தடி நீர்த்தேக்க தளம் ஒன்றினை (டெல்கத நிலம்) ஆய்வு / விசாரணைகளுக்கு அணுக முடியமையினால் விரிவான வடிவமைப்பு செயன் முன்னேற்றம் தடைப்பட்டது என்பதனை வலியுறுத்தல் வேண்டும். எனவே, தவிர்க்கப்பட முடியாத தாமதம் ஏற்பட்டிருக்கலாம். | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | வழங்கல் மற்றும் இடுதல், | டெண்டர் மற்றும் ஒப்பந்த பிரிவுகளுக்கு | 2021 திசெம்பர் தொடக்கம் 2022 சனவரி முதல் | பெகெஜ் 05 வடிவமைப்பு கட்டத்தில் காணப்பட்டமையினால் | திட்டமிடப்பட்ட காலத்தினுள் ஒப்பந்தம் | அமுலாக்கல் காலக்கட்டம் 12 மாதங்கள் ஆகும். | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகள் பூர்த்தி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விநியோக ஊட்டி மெயின்கள் மற்றும் இரண்டாம் நிலை மெயின்கள் எஞ்சிய பகுதி, DMA உபகரணங் களை வழங்கல் - பெகேஜ் 05 | ஏலங்களினை சமர்ப்பித்தல் மற்றும் ஏல மதிப்பீட்டிற்கு TEC இன் நியமனம். | வாரம் வரை | ஏல அழைத்தல் ஆரம்பிக்கப்படவில்லை. | வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கு இடமுள்ளது. | பிரதானமாக இந்த பெகேஜ் இன் திட்டமிடப்பட்ட விடயப்பரப்பின் சிக்கலான தன்மையின் காரணத்தினால் விரிவான வடிவமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற என்பதனை வலியுறுத்தப்படல் வேண்டும். | செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் வடிவமைப்பு கட்டத்திற்கு தேவையான செயற்திட்ட பதவியணி 24 ஆகும். எவ்வாறெனினும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முகாமைத்து சேவைகள் திணைக்களத்தினால் 9 பதவியணிக்காக மட்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வடிவமைப்பு கட்டத்திற்காக 15 பதவியணி நிரப்பப்பட வேண்டிதுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் விரைவுப்படுத்துவதற்காக தேவையான பதவியணி செயற்திட்டத்திற்கு இணைத்துக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விரிவான வடிவமைப்பு கட்டத்திற்காக தேவையான செயற்திட்ட பதவியணி 24 ஆக காணப்படுவதுடன் அதனால் எஞ்சிய பதவியணி இணைத்துக் கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். எனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து மந்தமான பதிலே காணப்படுகின்றது. | செயற்திட்ட பணிகளுக்காக போதுமான பதவியணி இணைத்துக் கொள்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி பிரமாணம் 626 இன் பிரகாரம், நிதிக் கூற்றுக்களினை தயாரிப்பதற்காக ஒவ்வொரு செயற்திட்டங்களுக்காக தனித் தனியே கணக்கு புத்தகங்கள் பேணிச் செல்லல் வேண்டும். எவ்வாறெனினும், செயற்திட்டத்திற்காக தனியே வங்கி கணக்கொன்று மற்றும் கணக்கு புத்தகமொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்திற்காக தனியே கணக்கு புத்தகங்கள் பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வொன்று செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |